**STARTING TIME 10.52 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 172/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 11.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **வாணி** Husband's Name : **தேவேந்திரன்**

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி தாலூக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 47

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

33. சீனிவாச நாயுடு மற்றும் அவரது உடன் பிறந்தவர்களுக்கும் விவசாயம் தவிர வேறு தொழில் எதுவும் இல்லை என்றால், விவசாயத்துடன், எனது சிறிய மாமனார் பக்தவச்சலம் கள் மரம் அதன் மூலமும் சம்பாதித்து வந்தனர். அதுபோல் அவர்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தபோது விவசாயத்தை தவிர கள் மரம் ஏறி அதன் மூலமும் சம்பாதித்து வந்தார்கள் என எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

34. எனது மாமனாரின் தகப்பனாரான போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 2.79 செண்ட் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி போடி நாயுடுவிற்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள்

சொந்தமாக இருந்தது, அதன் மூலம் எவ்வளவு வருமானம் வந்தது, எவ்வளவு செலவானது, எவ்வளவு பணம் கையில் இருந்தது போன்ற விவரங்களை தாவாவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

35. போடி நாயுடுவிற்கு பூர்வீகமாக ஏக்கர் 2.79 செண்ட் தவிர வேறு சொத்து எதுவும் இல்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துக்களின் மூலம் வந்த வருமானத்தை கொண்டு தான் அவர் அவரது மனைவி, 4 மகன்கள், 3 மகள்களை வளர்த்து ஆளாக்கினார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

36. எனது பிரமாண வாக்குமூலத்தில், கூட்டுக் குடும்ப வருமானத்தை கொண்டு சீனிவாச நாயுடுவின் பெயரில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளதால், அது போல் கூட்டுக் குடும்பத்திற்கு எவ்வளவு வருமானம் இருந்தது என்ற விவரம் எதையும் தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

37. எனது வழக்கிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்று எந்த சொத்துக்களை சொல்கிறேன் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

38. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1990–ம் ஆண்டு வாய்சொல் பாகம் நடந்தாக சொல்லியுள்ளதால், அந்த சமயத்தில் போடி நாயுடுவின் மகன்கள் மற்றும் மகள்களில் யார், யார் உயிருடன் இருந்தார்கள் என்றால், சீனிவாச நாயுடு, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு மற்றும் 3 மகள்கள் ஆகியோர்கள் உயிருடன் இருந்தார்கள். எனது மாமனார் கோவிந்தராஜ் நாயுடு மட்டும் அந்த சமயத்தில் காலமாகி இருந்தார். அந்த சமயத்தில் அந்த வாய்மூல பாகத்தில் யார், யார் கலந்துக் கொண்டார்கள் என்றால், மேற்படி சீனிவாச நாயுடு, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு

ஆகியோர்கள் கலந்துக் கொண்டார்கள். அவர்கள் 3 பேரை தவிர வேறு யாரும் இல்லையா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. காலமான எனது மாமனார் சார்பாக, அந்த வாய்மூல பாகத்தில் யார், யார் கலந்துக் கொண்டது என்றால், எனது கணவர், அவரது சகோதரர் பரசுராமன் மற்றும் எனது மாமியார் கலந்துக் கொண்டார்கள்.

39. மேற்படி வாய்மூல பாகத்தில் மேற்படி சீனிவாச நாயுடு, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு, எனது கணவர் மற்றும் அவரது சகோதரர், எனது மாமியார் என யார், யாருக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி வாய்மூல பாகம் சமயத்தில் எனது கணவருக்கும், அவரது சகோதரருக்கும் என்ன வயது என்றால், என் கணவர் 1971–ம் ஆண்டு பிறந்தார், அவரது சகோதரரின் வயது எனக்கு தெரியவில்லை.

40. மேற்படி சீனிவாச நாயுடு, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு, எனது கணவர் மற்றும் அவரது சகோதரர், எனது மாமியார் என இவர்கள் அனைவரும் யார் முன்னிலையில் வாய்மூலமாக பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேன் என்றால், ஜங்காலி மந்திரி மகன் சம்பத் மந்தரி, நாராயன சாமி மகன் கோவிந்த நாயுடு, வேலு நாயக்கர் மகன் பழனி நாயக்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள். வேறு யாரும் இருந்தார்களா என்றால், அது பற்றி தெரியவில்லை.

41. வாய்மூல பாகத்தில் யார், யாருக்கு என்னென்ன சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் எழுதி அதில் அனைவரும் கையெழுத்து செய்துக் கொண்டார்களா என்றால், இல்லை. நான் சொல்வது போல் 1990–ம் ஆண்டு வாய்மூல பாகம் நடந்ததாக சொல்வது முற்றிலும் தவறு என்றால், சரியல்ல.

42. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலமாக சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களையும் வாய்மூல பாகத்தில் பிரித்துக் கொண்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அந்த வாய்மூல பாகத்தில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் 1, 2 வாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது பொய் என்றால், சரியல்ல.

43. 1990–ம் ஆண்டு நடந்ததாக சொல்லும் வாய்மூல பாகத்தில் தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்துக்கள் யாருடைய பாகமாக ஒதுக்கப்பட்டதாக சொல்கிறேன் என்றால், 1, 2 வாதிகளின் பாகமாக ஒதுக்கப்பட்டது. அது போல் அவர்களது பாகமாக ஒதுக்கப்பட்டதாக சொல்வதால் அந்த சொத்துக்களை பொறுத்து 1, 2 வாதிகள் அவர்கள் பெயரில் வருவாய்துறை ஆவணங்களை பெற்று அந்த சொத்துக்களை அனுபவித்து வந்ததற்கு ஆவணங்களை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

44. இவ்வழக்கை 1, 2 வாதிகள் முதலில் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால், சரிதான். அப்போது இவ்வழக்கு சொத்து 1, 2 வாதிகளின் அனுபவத்தில் உள்ளதாக சொல்லி வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் பிறகு தாவா எ–அட்டவணை சொத்தினை பிரதிவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டதாகவும் அதனால் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லி தாவாவில் திருத்தம் செய்துள்ளோம் என்றால், சரிதான். 1990–ம் ஆண்டில் இருந்து தாவா சொத்துக்களை 1, 2 வாதிகள் அனுபவித்து வந்ததாகவும், பின்னர் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் ஆகக்கிரமிப்பு செய்துக் கொண்டதாகவும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

45. 10.10.2005 தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் தாவா சொத்தை 1-ம் வாதியின் நிலம் என மேற்கு செக்குபந்தியாக குறிப்பிட்டுள்ளதால், தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தமான சொத்து என சொல்வது தவறு என்றால், சரியல்ல.

46. 22.12.2011 தேதி அன்று என் கணவர் காவேரிபாக்கம் காவல் நிலையத்தில் 6-ம் பிரதிவாதி மீது கொடுத்த புகாரின் மீது போலீசார் விசாரணை செய்த சமயத்தில் தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையும் கோரமாட்டோம் என 6-ம் பிரதிவாதி ஒப்புக் கொண்டதாகவும், என் கணவர் பெயருக்கு கிரையம் பத்திரம் பதிவு செய்து தர ஒப்புக் கொண்டாகவும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல.

47. தாவா பி-அட்டவணையில் உள்ள சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 50 செண்ட் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அதில் 1, 2 வாதிகளுக்கு தாவா பி-அட்டவணையில் உள்ள 12-1/2 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்பதற்கு எழுத்து மூலமாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த 12-1/2 செண்டிற்கு கிழக்கு பக்கம் மற்றொரு 12-1/2 செண்ட் சொத்தை பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்குப்பட்டதாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால், சரிதான். அந்த 12-1/2 செண்டிற்கும் கிழக்கில் உள்ள மீதி 25 செண்ட் நிலம் பக்தவச்சலத்திற்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

48. தாவா பி-அட்டவணையில் சர்வே எண்ணில் மணி நாயுடுவிற்கு சொத்து எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றும், அவருக்கு வேறு இடத்தில் ஒதுக்கப்பட்டதாகவும் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால், அது போல் அவருக்கு வேறு எந்த இடத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் ஒதுக்கப்பட்டது என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

49. தாவா பி–அட்டவணையில் உள்ள 12–1/2 செண்டில் 1–ம் வாதி அவருக்கு பாத்தியப்பட்ட பாதி பாகத்தை 10.09.2004 அன்று ரூ.50,000/–க்கு என் கணவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை, வாய்மூலமாக தான் விற்பனை செய்தார்.

50. தாவா பி–அட்டவணையில் உள்ள மொத்த விஸ்தீரணம் 50 செண்ட் சொத்தை மேற்படிவாறு 1990–ம் ஆண்டு வாய்மூலமாக பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்வது தவறு என்றும், அந்த சொத்து சீனிவாச நாயுடுவிற்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல.

51. தாவா பி–அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் கட்டிய வீட்டை நாங்கள் அராஜகமாக ஆக்கிமிப்பு செய்து அனுபவித்து வருவதால், அந்த சொத்தின் சுவாதீனம் கேட்டு பிரதிவாதிகள் எங்கள் மீது அசல் வழக்கு எண் 161/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான், ஆனால் அந்த வீட்டை நாங்கள் கட்டியது ஆகும்.

52. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் 2 வருடத்திற்கு முன்பு தாவா எ–அட்டவணை சொத்தில் அத்துமீறி நுழைந்து சட்ட விரோதமாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல. எனவே, நாங்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 172/2019 வழக்கில் நாங்கள் கேட்டுள்ள எந்த பரிகாரங்களும் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்பதால் அவ்வழக்கை தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 161/2019 மற்றும் 170/2019 வழக்கில் கேட்டுள்ளவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 11.51. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.09.11 15:09:14 +0530